## மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை - 2014

மீள் குடியமர்த்துதல் அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 20(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, மீள் குடியமர்த்துதல் அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம், மீளாய்வாண்டினுள் காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் காசு உட்பாய்ச்சல்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i). செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 494,482 ஆன போதிலும் அது ரூபா 258,067 என காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii). மீளாய்வாண்டினுள் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் உருவாகியிருக்கவில்லை. எனினும், முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசு உட்பாய்ச்சல் ரூபா 530,524 என காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு கணிப்பிடுதல் தொடர்பில் முன்னைய ஆண்டில் பின்பற்றப்பட்ட கொள்கையை மாற்றியமை நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|

| | |
|---|---|
| 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i). I ஆம் பகுதியின் 12 ஆம் பிரிவு | வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வசித்துவருகின்ற இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக அப்பிரதேசங்களில் கிளை அலுவலகங்களை அமைப்பதற்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii). III ஆம் பகுதியின் 20(1) ஆம் பிரிவு | அதிகாரசபைக்கு சுயாதீன நிதியமொன்று காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான நிதியமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 513,936 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 170,208 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 684,144 வீழ்ச்சியினைக் காணக்கூடியதாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீள் குடியமர்த்துதல் அதிகாரசபையின் 2007 இன் 09 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 02 முதன்மை நோக்கங்கள் மற்றும் 14 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த நோக்கங்களை அடையக்கூடிய வகையில் உத்தேசங்களை தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் தலைவர் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெறாது அதிகாரசபையின் செயற்பாடுகளுக்கு புறம்பாக வெளிநாட்டுச் சுற்றுலாவொன்றிற்காக ரூபா 46,651 தொகையான பணத்தினை அதிகாரசபையிடமிருந்து பெற்றிருந்தார்

(ஆ) அதிகாரசபையின் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 30,912 தொகையான கொடுப்பனவினை மேற்கொண்டு புதினப்பத்திரிக்கை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்ததெனினும் அதற்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அமுல்படுத்துவதற்காக நாட்டினுள் இடம்பெயர்ந்தவர்களினதும் அகதிகளினதும் தகவல்களைப் பெற்று அதன் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும் அத்தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

அதிகாரசபையின் பதவியணியினரில் உள்ளடங்கியுள்ள பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் திட்டமிடல் வடிவமைப்பாளர் பதவிகள் 2007 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக 03 வருட காலத்தினுள் 04 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. இவ் வெற்றிடங்களுக்காக முன்னைய ஆண்டின் போது உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அதிகாரசபையின் நோக்கங்களையும் செயற்பாடுகளையும் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போயிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2014-2016 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

அதிகாரசபையினால் 05 மாவட்டங்களுக்காக மாவட்டமொன்றிற்கு 07 செயற்பாடுகள் வீதம் உள்ளடக்கப்பட்டு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒரு மாவட்டத்தில் எதுவித செயற்பாடும் இடம்பெற்றிருக்காததுடன் 03 மாவட்டங்களில் மாத்திரம் 03 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளை அதிகாரசபையால் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

**5.3 பணிப்பாளர் சபைக் கூட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படும் போது அக் கூட்டத்திற்காக நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பான செயலாற்றல் அறிக்கை, மாதாந்த செயற்பாட்டு அறிக்கை, மாதாந்த காசுப்பாய்ச்சல் கூற்று, பதவியணியின் நிலைமையை காட்டும் அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கைகள் முன்வைக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையினால் 01 பணிப்பாளர் சபைக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**5.4 ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல்**

அதிகாரசபையினால் 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஆ) கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்